# EASTERN UNIVERSITY SRI LANKA
## FACULTY OF COMMERCE & MANAGEMENT
## EXTERNAL DEGREES
## FIRST EXAMINATION IN BBA/COM – 2000/2001 (REPEAT) JULY 2007
## CC 113 SRI LANKAN STUDIES

பகுதி 1ல் எல்லா வினாக்களுக்கும், பகுதி 11ல் ஏதாவது நான்கு வினாக்களுக்கும் விடை தருக.

நேரம் : 3 மணி

### பகுதி I

1.

a) இலங்கையின் புராதன தலை நகரங்கள் இரண்டு தருக.

b) இலங்கையில் வரண்ட வலயத்தில் காணப்படும் இரண்டு மாவட்டங்களையும் ஈர வலயத்தில் காணப்படும் இரண்டு மாவட்டங்களையும் குறிப்பிடுக.

c) நெற் பயிர்ச்செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படும் மூன்று பிரதான நகரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

d) இலங்கையின் துறைமுகங்கள் மூன்று தருக.

e) இலங்கையின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்கள் இரண்டு தருக.

f) இலங்கையின் சுற்றுலாத் தொழிலுக்குப் பங்களிக்கும் மூன்று இடங்களை குறிப்பிடுக.

g) இலங்கையின் புவியியல் அமைவிடத்தைக் குறிப்பிட்டுக் காட்டுக.

h) இலங்கையின் மரபு சார்ந்த ஏற்றுமதிப் பொருட்கள் எவை?

i) பொருளாதார இரட்டைத் தன்மை என்றால் என்ன?

j) திறந்த பொருளாதாரம் என்பதில் நீர் விளங்கிக் கொள்வது யாது?

k) இலங்கையின் குடித்தொகை அமைப்பில் வயது வந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதன் காரணங்களைக் குறிப்பிடுக.

l) உலகமயமாதல் என்பதில் இருந்து யாது விளங்கிக் கொள்கிறீர்?

m) இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழில் எதிர்நோக்கியிருக்கும் முக்கிய பிரச்சனைகள் எவை?

n) இலங்கையின் "வெளிநோக்கிய பொருளாதாரக் கொள்கை" என்பது என்ன?

o) "அரச சார்பற்ற நிறுவனங்கள்" என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

p) தகவல் தொழில்நுட்பம் என்றால் என்ன?

q) இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி அமைப்புக்களைக் குறிப்பிடுக.

r) சார்க் அமைப்பில் இடம்பெறும் நாடுகளைக் குறிப்பிடுக.

s) இலங்கையில் வெளிவரும் செய்திப் பத்திரிகை ஐந்து தருக.

t) இலங்கையில் எண்ணெய்வளம் இருப்பதாகக் கருதப்படும் பிரதேசங்களைக் குறிப்பிடுக.

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

01. (i) இலங்கையின் கிராமிய விவசாயத்துறை எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் யாவை?

(08 புள்ளிகள்)

(ii) அப் பிரச்சினைகளைத் தீர்க்க நீர் கூறும் ஆலோசனைகள் எவை?

(07 புள்ளிகள்)

02. இலங்கையில் தற்போது நிலவும் யுத்தநிறுத்த உடன்பாடு சீர் குலைந்தால் அது பின்வருவனவற்றை எவ்வாறு பாதிக்கும்?

(i) இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி

(ii) உல்லாசப் பிரயாணத்துறை

(iii) வரவு செலவுத் திட்டம்

(iv) அன்னியச் செலாவணி இருப்பு

(15 புள்ளிகள்)

03. (i) இலங்கையில் ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் பொருளாதாரத் தாக்கங்களைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(ii) இத் தாக்கங்களை நிவர்த்தி செய்ய இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிவாரண நடவடிக்கைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(07 புள்ளிகள்)

04. (i) இலங்கையில் பின்பற்றப்படும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையினைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(ii) இம் முறையின் நன்மை தீமைகளை எடுத்துக் கூறுக.

(07 புள்ளிகள்)

05. (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு தேடிச்செல்வோரின் எண்ணிக்கை இன்று இலங்கையில் அதிகரித்து வருகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்க.

(08 புள்ளிகள்)

(ii) இதன் விளைவாக இலங்கை எதிர்நோக்கும் பொருளாதார விளைவுகளை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு தருக.

(i) அண்மையில் பரவிவரும் "பறவைக் காய்ச்சல்" நோய் - அதன் விளைவுகள்

(ii) ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு – அதன் விளைவுகள்

(iii) "மகிந்த சிந்தனை"யும் இலங்கையின் பொருளாதாரமும்.

(15 புள்ளிகள்)